# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශේෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2213/11 - 2021 පෙබරවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2021.02.02

*2213/11 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78* (XVIII)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 48அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

*செயலாளர்,*
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.*

*கொழும்பு,*
*2020, திசெம்பர் 17.*

*கட்டளைச் சட்டம்*

*1. இக்கட்டளைச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, பட்டதாரிக் கற்கைகள் பீடக்கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்; அத்துடன் அது, சட்டத்தின் 48அ (1) ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பட்டதாரிக் கற்கைகள் பீடங்கள் எல்லாவற்றுக்கும் ஏற்புடையதாதலும் வேண்டும்.*

*2. சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, சட்டத்தின் பிரிவு 48அ (1) இன்கீழ் தாபிக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "பீடம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) பட்டதாரிக் கற்கைகள் பீடமொன்று, முறையான பல்கலைக்கழகத்தினாலும் ஆணைக்குழுவினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான ஏதேனும் கற்றற் கிளையில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், உயர் பட்டங்களுக்கும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளுக்கும் இட்டுச்செல்கின்ற கற்கைநெறிகளை வழங்குவதற்காகவும் நிருவாக நிலையமாகவிருத்தல் வேண்டும்.*


1A - PG 5296 — 175 (2021/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3.* பீடமானது, பல்கலைக்கழகத்தினுள் நிறைவேற்றப்பட்ட பட்டப்பின் கற்கைகளையும் விசேடித்த அல்லது பல்கற்கைத்துறைசார் ஆராய்ச்சியையும் மேம்படுத்துதலும், ஒருங்கிணைத்தலும், ஒழுங்குபடுத்துதலும் வேண்டுமென்பதுடன், முறையான பல்கலைக்கழகத்தின் மூதவையினது பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(அ) பட்டப்பின் சேர்த்துக்கொள்ளுகை, கற்கைநெறித் தேவைப்பாடுகள், கற்கைநெறி உள்ளீடுகள் மற்றும் பரீட்சைத் திட்டங்கள் என்பவற்றுக்கான தேவைப்பாடுகளைக் குறித்துரைப்பதற்கும், அத்துடன் பட்டப்பின் கற்கைகளுக்காகப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்துள்ள பட்டப்பின் நிறுவகங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தவிர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும்;

(ஆ) தேவையினதும் அக்கறைகொண்டுள்ளவரின் பின்னூட்டியினதும் அடிப்படையின்மீது புதிய பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்குப்பின்னர் அடையாளங்காண்பதற்கும் அறிமுகப்படுத்துவதற்கும்;

(இ) பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் தரம் தொடர்பிலான நியமங்களைத் தாபிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும்;

(ஈ) போட்டியுள்ள ஆராய்ச்சி முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கு மாணவர்களுக்கு உதவுவதற்கும், பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேசப் பிரச்சினைகளை விளித்து தூய அல்லது பிரயோக மற்றும் கற்கைத்துறைகளுக்கிடையேயான ஆராய்ச்சியை நடாத்துவதற்கும்;

(உ) ஆராய்ச்சி ஒழுக்கவியலுடன் இணங்கியொழுகுவதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதற்கும், அவசியமாயின், ஒழுக்கவியற்சார் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு வசதியளிப்பதற்கும்;

(ஊ) முதன்மையான ஆராய்ச்சியினூடாகப் புதுப்புனைவுகளையும் புத்தாக்கங்களையும் மேம்படுத்துவதற்கும்;

(எ) ஆராய்ச்சிப் பட்டங்களை நடாத்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறாக மேற்பார்வையாளர்கள், கூட்டு மேற்பார்வையாளர்கள், மற்றும் வேறு வளவாளர்களாக நியமிக்கப்படுவதற்கான ஆட்களை விதந்துரைப்பதற்கும்;

(ஏ) வருகைதரு விரிவுரையாளர்கள், பரீட்சகர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்படுவதற்கான ஆட்களை விதந்துரைப்பதற்கும்;

(ஐ) உயர் பட்டங்களும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளும் அளிக்கப்படுவதற்கான மாணவர்களை விதந்துரைப்பதற்கும்;

(ஒ) பட்டப்பின் கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் பீடங்களுக்கிடையேயும், பீடங்களுக்குள்ளேயும் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் உடனுழைப்பை மேம்படுத்துவதற்கும்;

(ஓ) ஆராய்ச்சியை நடாத்துவதனூடாகவும், அத்தகைய ஆராய்ச்சியின் முடிவெடுப்புகளை மாநாடுகளில் அல்லது சிந்தனையரங்குகளில் முன்வைப்பதனூடாகவும் மற்றும் நடவடிக்கைகளில் அல்லது சஞ்சிகைகளில் அவற்றை வெளியிடுவதனூடாகவும் அவசியமான திறன்களை அபிவிருத்திசெய்வதற்கு மாணவர்களுக்கு வசதியளிப்பதற்கும்;

(ஔ) ஆராய்ச்சியைப் பொறுப்பேற்பதற்குக் கல்விமான்களை ஊக்குவிப்பதற்கும் அத்தகைய ஆராய்ச்சிக்காகவும் அறிவைப் பரப்புவதற்காகவும் அவசியமான வசதிகளை வழங்குவதற்கும்; அத்துடன்

(க) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள வேறு பட்டதாரிப் பீடங்களுடனும் பாடசாலைகளுடனும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் பல்கலைக்கழகங்களுடனும் தொழிற்றுறைகளுடனும் இணைப்புக்களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும்.

*4.* (1) பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராகவும் மற்றும் பீடத்தின் கல்விசார் அத்துடன் நிருவாகத் தலைவராகவும் இருக்கவேண்டிய பீடத்தின் பீடாதிபதியொருவர் இருத்தல் வேண்டும்.

(2) பீடத்தின் முதலாவது பீடாதிபதி ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும். பீடத்தின் அடுத்துப்பின்னரான ஒவ்வொரு பீடாதிபதியும், பல்கலைக்கழகத்தின் ஓர் இணைப் பேராசிரியர், பேராசிரியர் மற்றும் சிரேட்ட பேராசிரியர் என்போருளிருந்து பட்டதாரிக் கற்கைகள் சபையினால் பேரவைக்கு விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக்கொண்டவொரு குழாத்திலிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பீடத்தின் பீடாதிபதி அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் -

(அ) பீடத்தின் முதலாவது பீடாதிபதியின் விடயத்தில்,அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில், ஆணைக்குழுவின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரினால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது ஆணைக்குழுவினாலும்; அத்துடன்

(ஆ) பீடத்தின் ஒவ்வோர் அடுத்துப்பின்னரான பீடாதிபதியினதும் விடயத்தில், முன்னர் அகற்றப்பட்டாலொழிய, அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில், பேரவையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரினால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது பேரவையினாலும் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட ஆளொருவர், நியமிக்கப்பட்டதன்மீது, பல்கலைக்கழகத்தினது பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட நேரத்தில், விடயத்துக்கேற்ப, துணைத்தலைவராக, அல்லது ஒரு பீடத்தின் பீடாதிபதியாக அவர் பதவிவகித்தால், அத்தகைய பதவியை வகிக்காதொழிதல் வேண்டும்.

(5) பீடத்தின் பீடாதிபதி, சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், பீடத்தின் பீடாதிபதி என்ற பதவிக்குரிய கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்காகப் பேரவை தகுதியானதென அது கருதுகின்றவாறான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(6) பீடத்தின் பீடாதிபதி ஓய்வுபெறுவதன்மீது அல்லது பதவி விலகுவதன்மீது அல்லது மூன்றுமாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு அவர் இயலாதவராகவிருக்கும் விடயத்தில், பீடாதிபதியின் பதவி வறிதாகவுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் துணைக் கட்டளைச்சட்டம் (2) இன் ஏற்பாடுகளுக்கிணங்கப் புதியவொரு பீடாதிபதி நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(7) பதவியிலிருந்து விலகும் அல்லது அகற்றப்படும் பீடத்தின் பீடாதிபதி, பீடாதிபதியாக அவர் நியமிக்கப்படுவதற்கு நேர்முன்னர் ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினராக இருந்திருப்பின் தமது நிலையான பதவியில் அவரது ஓய்வுபெறும் வயதை எய்தியிராவிடின், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தில் தமது நிலையான பதவிக்குத் திரும்பச்செல்லலாம்.

5. பட்டதாரிக் கற்கைகள் பீடமானது, பின்வருவோரைக் கொண்டுள்ளதும், (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) பட்டதாரிக் கற்கைகள் சபையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்:-

(அ) தவிசாளராகவிருக்கவேண்டிய பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி;
(ஆ) கற்கைச் சபைகளின் தவிசாளர்கள்;
(இ) பல்கலைக்கழகத்தின் எல்லா பீடங்களினதும் பீடாதிபதிகள்.

(2) பின்வரும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:-

(அ) சட்டத்தின் பிரிவு 44 (1) (vii) இல் குறித்துரைக்கப்பட்டவாறு பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து பல்கலைக்கழகத்தின் பேரவையினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர்;

(ஆ) பட்டதாரிக் கற்கைகள் பீடம் தொடர்பான கற்கைத் துறைகளில் புகழ்பெற்ற ஆட்களிலிருந்து, பல்கலைக்கழகத்தின் மூதவையினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டவர்களும், பல்கலைக்கழகப் பணியாட்டொகுதி உறுப்பினர்களாகவிராதவர்களுமான உறுப்பினர்கள் இருவர்;

(இ) பீடத்தின் கற்கைச் சபைகளில் பட்டப்பின் மட்டத்திலுள்ள ஆசிரியர்களிலிருந்து ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(3) சபையின் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலேயொழிய, அவரது பெயர் நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் மீளப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(4) பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் அதிசிரேட்ட நிருவாக அலுவலர், சபையின் செயலாளராகச் சேவையாற்றுதல் வேண்டும்.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் அதன் உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(6) சபையானது, குறித்தவொரு நோக்கத்துக்காகவும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காகவும் ஓராளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைச் சபைக்குக் கூட்டுச்சேர்க்கலாம்; ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட எவரேனுமாள் சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(7) சபையின் எவரேனும் உறுப்பினர், பீடத்தின் பீடாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(8) சபையின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக வருகைதராதிருக்கும் சபையின் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், துணைக் கட்டளைச்சட்டம் (2) இன் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறெவரேனுமாள் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(9) உறுப்பினரொருவரின் பதவிக்காலம் முடிவுற்றமை, அவர் பதவிவிலகியமை அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகச் சபையில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், அவரது அடுத்துறுநர், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(10) தவிசாளர், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகை தராதிருப்பின்,சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவெனத் தம்முள் ஒருவரைத் தவிசாளராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(11) சபையானது அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், அது, ஒவ்வோராண்டிலும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

6. (1) இச்சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமையவும்,மூதவையின் பணிப்புக்கமையவும், சபையானது, போதனை, கல்வி, ஆராய்ச்சி, பரீட்சைகள், தொழிற்றுறை-பீடப் பங்காண்மைகள், பீட-சமுதாய ஊடாட்டங்கள் மற்றும் அறிவைப் பரப்புதல் என்பவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சபையானது, உபகட்டளைச்சட்டம் (1) இனால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) பீடம் சம்பந்தமான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பீடத்தின் கையாளுகையில் இடப்பட்ட எவையேனும் நிதிகளை நிருவகிப்பதற்கும்;

(இ) பீடத்தின் நிதிசார் மதிப்பீடுகளைத் தயாரித்து அவற்றைப் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஈ) பீடத்தினுள்ளான பல்வேறு கற்கைத்துறைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்களையும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளையும் அத்தகைய பட்டங்களுக்கும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளுக்கும் தகைமைபெறுவதற்கு விரும்பும் மாணவர்களினால் பின்பற்றப்படவேண்டிய கற்கைநெறியையும் பயிற்சியையும், தேறப்படவேண்டிய பரீட்சைகளையும், திருப்திசெய்யப்படவேண்டிய ஏனைய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைப்பதற்கும்;

(உ) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களையும், பரீட்சகர்கள் சபைகளின் தன்மையையும் அமைப்பையும் மூதவைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஊ) எந்தக் கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் கருமத்துக்காக விதிகளை ஆக்குவதற்கும்;

(எ) ஒரு பீடத்தில் ஏலவேயுள்ள கற்கைத்துறைகளின் மீள ஒழுங்குபடுத்துகைத் திட்டங்களை, மூதவைக்கும் பேரவைக்கும் விதந்துரைப்பதற்கும்;

(ஏ) மூதவையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, ஒரு பீடத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான அல்லது பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும்;

(ஐ) பட்டப்பின் பட்டங்களினதும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளினதும் அளிப்புக்காகவும் வழங்குகைக்காகவும் பொருத்தமான ஆட்களின் பெயர்களை மூதவைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஒ) கல்விசார் கலந்தாலோசனைக் குழுவொன்றையும், மற்றும் தகுதியானவையென அது கருதக்கூடியவாறாக அத்தகைய எண்ணிக்கையினவான உபகுழுக்களையும் நியமிப்பதற்கும்;

(ஓ) அவசியமாயின், பீடத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கு அவற்றினுள் கூறுகளைத் தாபிப்பதற்கும்; அத்துடன்

(ஔ) ஏதேனும் கற்றற் கிளையிலான பாடவிதானங்கள், கற்கைநெறிகள், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி என்பன தொடர்பிலும், பட்டப்பின் கற்பித்தலில் மற்றும் ஆராய்ச்சியில் துறைகளுக்கிடையேயான கற்கைகள் மற்றும் பீடங்களுக்கிடையேயான மற்றும் தொழிற்றுறை உடனுழைப்புக்கான வசதிகள் என்பன தொடர்பிலும் மூதவைக்கு விதந்துரைப்பதற்கும்.

7. (1) பல்கலைக்கழகத்தினாலும் ஆணைக்குழுவினாலும் காலத்துக்குக்காலம் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக அத்தகைய எண்ணிக்கையினவான கற்கைச் சபைகளைப் பீடமானது கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வரும் ஆட்களை அத்தகைய நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட 3 ஆண்டுகளைக் கொண்ட காலப் பகுதியொன்றுக்காக உறுப்பினர்களாகச் சேர்க்கலாம்:-

(அ) பல்கலைக்கழகத்தின் இயைபான கற்கைத்துறைகளின் சிரேட்ட பேராசிரியர்கள் அல்லது பேராசிரியர்கள்;

(ஆ) கற்பிக்கப்பட்ட பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களை அல்லது ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை முனைகின்ற இயைபான துறைகளின்தலைவர்கள்;

(இ) பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பாளர்கள்;

(ஈ) கற்கைச் சபையின் தவிசாளரினது விதப்புரையின்மீது மூதவையினால் நியமிக்கப்பட்ட புகழ்பெற்ற கல்விமான் ஒருவராக இருக்கவேண்டியவரும் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயிருந்தானவருமான நியமத்தவரொருவர்.

அத்தகையவொரு நியமத்தர் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) கற்கைச் சபை ஒவ்வொன்றும், சிரேட்ட பேராசிரியர்களுளிருந்தும் பேராசிரியர்களுளிருந்தும் பட்டதாரிக்கற்கைகள் சபையினால் நியமிக்கப்பட்ட தவிசாளரொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், விதிவிலக்கான சூழ்நிலைகளில், பீடத்தின் பீடாதிபதியினது விதப்புரையின்மீது, பட்டதாரிக் கற்கைகள் சபையானது ஏகமனதான முடிபொன்றின்மீது ஒரு சிரேட்ட பேராசிரியர் அல்லது பேராசிரியர் தவிர்ந்த ஆளொருவரைத் தவிசாளராக நியமிக்கலாம்.

(4) கற்கைச் சபையின் தவிசாளரொருவர், அத்தகைய நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

8. ஒவ்வொரு கற்கைச் சபையினதும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பட்டதாரிக்கற்கைகள் சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்துட்கொண்டு அதுபற்றி அறிக்கையிடுவதற்கும்;

(ஆ) அக்கற்கைச் சபையின் கற்கைநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் பற்றிய விதப்புரைகளையும் அறிக்கைகளையும் பட்டதாரிக் கற்கைகள் சபைக்கு முன்வைப்பதற்கும்;

(இ) ஏதேனும் விசேட பாடத்தைக் கவனத்துட்கொண்டு அதன்மீது அறிக்கையிடும் நோக்கத்துக்காகக் குழுக்களை நியமிப்பதற்கும்;

(ஈ) கற்கைநெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தேவைப்பாடுகளைப் பட்டதாரிக் கற்கைகள் சபைக்கு விதந்துரைப்பதற்கும்;

(உ) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களைப் பட்டதாரிக் கற்கைகள் சபைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஊ) ஆராய்ச்சிப்படிப்புப்பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பன அளிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைப் பட்டதாரிக்கற்கைகள் சபைக்கு விதந்துரைப்பதற்கும்;

(எ) ஏலவேயுள்ள கற்கைச் சபைகளை மீளஒழுங்குபடுத்துவதற்கும், அவசியமாயின், புதிய கற்கைச் சபைகளைத் தாபிப்பதற்குமான திட்டங்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன், பட்டதாரிக் கற்கைகள் சபைக்கு விதந்துரைப்பதற்கும்; அத்துடன்

(ஏ) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் தேறியுள்ளவர்களாகவும் விதித்துரைக்கப்பட்ட வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியவர்களாகவும் இருந்து, பட்டப்பின் பட்டங்களும், மற்றும் ஏனைய கல்விசார் தேர்ச்சிகளும் அளிக்கப்படுவதற்குத் தகவுடையவர்களாகவுள்ள ஆட்களைப் பட்டதாரிக் கற்கைகள் சபைக்கு விதந்துரைப்பதற்கும்.

9. பீடமானது மூதவையினால் நியமிக்கப்பட்ட ஒழுக்கவியற் குழுவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். குழுவானது, பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பீட்டு நியதிகளையும் மற்றும் நியமத் தொழிற்பாடுசார் நடவடிக்கைமுறையையும் கொண்டுள்ளது. அத்தகைய குழுவின் முக்கிய பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் இணையவழிக்கற்றல் செயல்முறைகள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடாத்துவதனூடாக ஆராய்ச்சி ஒழுக்கவியலைக் கற்று செயல்முறைப்படுத்துவதற்குப் பட்டப்பின் மாணவர்களை ஊக்குவிப்பதற்கும்;

(ஆ) ஒழுக்கவியற் குழுவினாற் பெறப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடுசெய்து ஒழுக்கவியற் குழுவினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இசைய ஒழுக்கவியற்சார் அனுமதியை வழங்குவதற்கும்;

(இ) ஆராய்ச்சியை நடாத்துவதிலும் ஆராய்ச்சியின் முடிவெடுப்புக்களை வெளியிடுவதிலும் அல்லது முன்வைப்பதிலும் ஆராய்ச்சிசெய்யும் மாணவர்களினால் ஒழுக்கவியற்சார் நெறிகள் பின்பற்றுப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும்.

10. பீடத்தின் கற்பித்தல் பணியாட்டொகுதியினர் பின்வருமாறு நியமிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) தேவைப்பட்ட ஆராய்ச்சியிலான அனுபவத்தையும் முதன்மையான கல்விசார் எய்துகைகளையும் கொண்டவர்களும் சிரேட்ட விரிவுரையாளர் தரம் II மற்றும் அதற்கு மேற்பட்ட பதவியை வகிக்கின்றவர்களுமான பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் பணியாட்டொகுதியினருளிருந்தானவர்கள், பட்டதாரிக் கற்கைகள் சபையினால் குறித்துரைக்கப் பட்டவாறான காலப்பகுதியொன்றுக்குப் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) நிதிகள் அல்லது மானியக்கொடைகள் கிடைக்கக்கூடியமைக்கு அமைய, இருபத்திநான்கு மாதங்களை விஞ்சாத ஏதேனும் காலபகுதிக்குப் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயிருந்தான வருகைதரு பேராசிரியர்களுளிருந்து;

(இ) விதிமுறைப்பட்ட கல்விசார் தகைமைகளைக் கொண்டிராதவர்களாக இருக்கக்கூடியவர்களும் ஆனால் நாம் கொண்டுள்ள செயல்முறைப் பயிற்சி மற்றும் அனுபவத்தின் காரணமாக கற்பித்தல் பதவியொன்றை வகிப்பதற்கு வேறுவகையில் புகழ்பெற்றமுறையில் தகைமைகொண்டிருக்ககூடியவர்களுமான கௌரவ விரிவுரையாளர் களுளிருந்து.

11. பீடத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

12. ஒவ்வொரு கற்கை நிகழ்ச்சித்திட்டமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் அடிப்படையின்மீது தயாரிக்கப்பட்டவொரு வரவுசெலவுத்திட்டத்தின்மீதானதாக இருத்தல் வேண்டும்.

13. பீடமானது, பல்கலைக்கழகம் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும், அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும், அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகளும் புள்ளிவிபரங்களும் பற்றிய வருடாந்தக் கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

*14.* இக்கட்டளைச்சட்டத்தில் -

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருளாகும்;

"தோதான சாதனம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், துணைவிதி அல்லது விதி என்று பொருளாகும்;

"பட்டதாரிக் கற்கைகள் சபை" என்பது, பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் சபை என்று பொருளாகும்;

"ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"பேரவை" என்பது, பல்கலைக்கழகத்தின் எந்தப் பேரவையில் பட்டதாரிக் கற்கைகள் பீடம் தாபிக்கப்படுகின்றதோ பல்கலைக்கழகத்தின் அந்தப் பேரவை என்று பொருளாகும்;

"உயர் கல்வி நிறுவனம்" என்பது, சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பீடத்தின் பீடாதிபதி" என்பது, பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி என்று பொருளாகும்;

"ஏனைய பீடாதிபதிகள்" என்பது, பல்கலைக்கழகத்தின் பட்டதாரிக் கற்கைகள் தவிர்ந்த வேறு பீடங்களின் பீடாதிபதிகள் என்று பொருளாகும்;

"பல்கலைக்கழகம்" என்பது, பட்டதாரிக் கற்கைகள் பீடம் எந்தப் பல்கலைக்கழகத்தினுள் தாபிக்கப்படுகின்றதோ அந்தப் பல்கலைக்கழகம் என்று பொருளாகும்.

*15.* ஆயிரத்துதொளாயிரத்து எண்பத்தேழாமாண்டு செத்தெம்பர் 30 ஆந் திகதிய 473/ 9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கக் கட்டளைச்சட்டம், சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

*01-91*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.